முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 205/2014

இன்று 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நடராஜன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ரங்கப்ப கவுண்டர் | கிராமம் | : சேவூர் |
| வயது | : | 66 | தாலூக்கா | : அவிநாசி |
| நாள் | : | 02-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் வழக்கின் பிரதிவாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 26.06.2012 | அ.வ.எண்.192/2012 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை | சான்று நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 26.06.2012 | இ.ம.எண்.711/12 பிரமாண வாக்குமூலம் மற்றும் சான்றிட்ட உத்தரவு நகல் | நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 14.02.2025 | அ.வ.எண்.437/16 கூடுதல் சார்பு நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை | சான்று நகல் |
| பி.வா.சா.ஆ.4 | | வாதியும் பிரதிவாதியும் கூட்டாக அவினாசி கத்தோலிக்க சிரியன் வங்கிக்கு கொடுத்த அடமான கடன் பத்திரம் | சான்று நகல் |

வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.02.02 14:30:04 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.